<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No.642 /2023**</u>

<u>**வழக்கு சாட்சி PW-7**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இசக்கிராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கனி | தொழில் | : | கொத்தனார் |
| கிராமம் | : | சங்குபுரம் | வயது | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 17th, 2025.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் சங்குபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியாது. அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஐ எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 03.12.2022 ம் தேதி, பண்டாரசாமி அவருக்கு சொந்தமான இடைகால் – சேர்ந்தமரம் மெயின்ரோட்டில் உள்ள அவரது இடத்தில் வீடு கட்டுவதற்காக மோட்டார் மாட்ட வேண்டி என்னை அழைத்தபோது, நான் சுரேஷ் என்பவரை அழைத்து கொண்டு இரவு 08.30 மணிக்கு வேலை செய்து கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. அப்போது 2 ம் எதிரி முருகையா அ.சா.1 ஐ பார்த்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. 1 ம் எதிரி பூராஜ் கையில் அருவாளை வைத்துக்கொண்டு, கொலை செய்ய வேண்டும்

என்ற எண்ணத்தில் கலாச்செல்வி என்பவரை பார்த்து அசிங்கமாக பேசி, கழுத்தை நோக்கி வெட்டியபோது அவர் இடது கையால் தடுத்தார் என்றால் சரியல்ல. 1ம் எதிரி பூராஜ், சாட்சிகள் பண்டாரசாமி, மகாலட்சுமி ஆகியோர்களை கீழே தள்ளி விட்டு, மகாலட்சுமியை அருவாளால் வெட்டினார் என்றால் சரியல்ல. அதனை தடுக்க போன பண்டாரசாமியை 1வது எதிரி அரிவாளால் இடது முன்னங்கையில் வெட்டி காயம் ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.20 16:30:20 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No.642 /2023</u>**
**<u>வழக்கு சாட்சி PW-8</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இசக்கிராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இராமையா | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | அருணகிரிபுரம் | வயது | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 17th, 2025.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் அருணகிரிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு அருணகிரிபுரம் செல்லும் இரயில்வே கேட்டிற்கு அருகே வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 03.12.2022ம் தேதி, காலை 15.30 மணிக்கு அருணகிரிபுரம் ரேடியோ நிலையத்தில் வைத்து எதிரி

முருகையா என்பவரை என் முன்பும், கபில் முன்பும் கைது செய்து விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் தனது வீட்டிற்குள் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து ஆஜர் செய்வதாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. பின்னர், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் 16.45 மணிக்கு எதிரி முருகையா அவரது வீட்டிற்குள் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், கபில் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.20 16:30:28 +0530